# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 15.04.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

கடந்த இரண்டு ஜுமுஆக்களுக்கு முன்னர் நான் ஆட்சியாளர்களின் தவறான போக்கு தொடர்பாகவும் பொதுமக்களின் உரிமைகளை அவர்கள் சரியான முறையில் நிறைவேற்றாமல் இருப்பது தொடர்பாகவும் அதற்கு எதிராக பொதுமக்களின் எதிர்நடவடிக்கையும் பரிமாற்றமும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை திருக்குர்ஆன், ஹதீஸ், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகள் ஆகியவற்றின் ஒளியில் விளக்கிக் கூறியிருந்தேன். இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கும் போது ஒரு உண்மையான முஸ்லிமின் எதிர்நடவடிக்கை எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் கூறியிருந்தேன்.

இப்போது அரபு நாடுகளில் ஆட்சியாளர்களுக்கு எதிராக ஒரு காற்று வீச ஆரம்பித்திருக்கிறது. அந்த ஆட்சியாளர்களிடமிருந்து எப்படி நம்முடைய உரிமைகளைப் பெற வேண்டும்? அல்லது அவர்களை ஆட்சியிலிருந்து எப்படி அகற்றலாம்? என்றெல்லாம் கருத்துக்கள் பேசப்படுகின்றன. எனவே, அரபு நாட்டிலுள்ள நமது அஹ்மதிகள் இந்த விஷயம் தொடர்பாக மிகவும் ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். இந்த ஆர்வத்தை கருத்தில் கொண்டவாறு நமது அரபி சேனலான M.T.A.3 –ல் நேரடி ஒளிபரப்பைச் செய்பவர்கள் தமது அல்ஹிவாருல் முபாஸிரா என்ற நேரடி ஒளிபரப்பில் ஒவ்வொரு மாதத்திலும் அதன் முதலாவது வியாழக்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் அவர்கள் இந்த தலைப்பிலும் பேசி வருகின்றார்கள். அதில் கூறப்படும் விஷயங்கள் நேரடியாக அரபு நாட்டின் அரசியல் நிலைமைகள் தொடர்பாக இல்லாவிட்டாலும் அது முஸ்லிம்களின் தற்போதைய நிலை குறித்து விளக்கக்கூடியதாக இருக்கின்றது. அந்த நிகழ்ச்சியை நடத்துகின்ற ஷரீஃப் உஹதா சாஹிப் அவர்கள் இந்த நிகழ்ச்சி தொடர்பாக என்னிடமும் சில விஷயங்களைக் கூறியிருந்தார். பிறகு அவர் எனக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அல்ஹுதா என்ற நூலிலிருந்தும் சில பகுதிகளை அடையாளமிட்டு அனுப்பியிருந்தார். இன்று குழப்பங்கள் நடைபெறுகின்ற நாடுகளின் ஆட்சியாளர்களின் நிலைகளுக்கு இந்த நூலிலுள்ள கருத்துக்கள் பொருந்துகிறது. மேலும் ஆட்சியாளர்களுக்கு மட்டுமின்றி பொதுமக்கள், ஆலிம்கள் ஆகியோரின் நிலைகளுக்கும் இதிலுள்ள கருத்துகள் பொருந்துகிறது.

தங்களது நிகழ்ச்சிகளில் இதுபற்றி அவர்கள் விளக்கமாகக் கூறியிருப்பார்கள். நானும் இந்த விஷயம் தொடர்பாக சிலவற்றைக் கூற விரும்புகிறேன். எந்த சில நாடுகளிலுள்ள பொதுமக்கள் அரசாங்கத்திற்கு எதிராக உணர்வு பொங்க எழுந்து நிற்கின்றார்களோ அவர்கள் பற்றிய படத்தை மட்டும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த நூலில் எடுத்துக் காட்டவில்லை. கடந்த 100 வருடங்களுக்கும் அதிகமாக சென்று விட்ட அந்த நாட்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், முஸ்லிம் அரசர்கள் தொடர்பாகவும், ஆட்சியாளர்கள் தொடர்பாகவும், பொதுமக்கள் தொடர்பாகவும், ஆலிம்கள் தொடர்பாகவும் கூறியுள்ள கருத்துக்கள் உண்மையானவை என்பதற்கு எல்லா முஸ்லிம் நாடுகளும் சாட்சி பகர்கின்றது.

இதே நிலைமைதான் இன்று நம் முன்னால் இருக்கின்றது. மேலும் நாம் பார்க்கும் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்திலிருந்த முஸ்லிம் நாடுகள் மட்டுமல்லாமல் அவர்களது மரணத்திற்குப் பிறகு எந்த புதிய இஸ்லாமிய நாடுகள் தோன்றினவோ அந்த நாடுகளிலிருந்த ஆட்சியாளர்கள், குடிமக்கள், பெயர் தாங்கிய உலமாக்களின் நிலைமையும் கூட தனது நூலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதற்கு ஏற்பவே இருந்தது. இந்த எல்லா அபாயகரமான வெட்கப்பட வேண்டிய சூழ்நிலைகள் தொடர்பாகவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த நூலில் விளக்கமாக எழுதியுள்ளார்கள்.

பிறகு அந்த நிலைமைகளுக்கான தீர்வையும் அவர்கள் அந்த நூலில் கூறியுள்ளார்கள். வரவேண்டிய காலத்தின் மஸீஹ் வந்து விட்டார். ஆயிரக்கணக்கான அடையாளங்களும் விண்ணின் உதவிகளும் அவரது வருகைக்கு சாட்சி பகர்கின்றன. அவரை ஏற்றுக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பை நிறைவேற்றும்படி செய்வதில்தான் இனி முஸ்லிம்கள் எஞ்சியிருப்பதற்கான வழி இருக்கின்றது. இதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய விஷயங்களைக் கேட்டு அதை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக அவர்களுக்கு எதிராக அவர்கள் எதிர்ப்பின் புயலை வீசும்படி செய்தார்கள். ஆனால், அவர்களின் வாதத்திற்குப் பிறகு அஹ்மதிய்யத்தின் எதிரிகள்கூட இஸ்லாத்திற்கு தொண்டு செய்வதாக வாதம் புரிந்தவாறு இஸ்லாத்தை தப்லீக் செய்வதற்கான முயற்சிகளைச் செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களின் இந்த முயற்சிகளின் உண்மை நிலை என்ன? எந்த அளவு இஸ்லாத்தைப் பற்றிய வேதனை அவர்களுக்கு இருக்கின்றது என்பதைப் பற்றி அல்லாஹ்வே நன்கறிவான். இதை இப்போது நான் விளக்கப் போவதில்லை. ஆனால், சில அமைப்புகள் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்க முயற்சி செய்தது. ஆனால், அவர்களுக்கு நேரடியாக இறைவனின் வழிகாட்டல் இல்லாமல் இருந்ததால் மார்க்கத்தில் புதிதாக புகுத்தப்படும் விஷயங்களும், ஒவ்வொருவரும் தங்களது குறிப்பான சிந்தனைக்கேற்ப கூறும் விஷயங்களும் அதிகமாக பரப்பப்பட்டது. பல்வேறு பிரிவினர் தங்களது சுய கருத்துக்களை தப்லீக் செய்ய ஆரம்பித்தார்கள். அடிப்படையான இஸ்லாமிய போதனைகளை அவர்கள் மறந்து விட்டார்கள். பல பித்அத்துகளும் நுழைய ஆரம்பித்தன. நெறி நீதி தீர்ப்பவராக அல்லாஹ் ஒருவரையே அனுப்ப வேண்டியது இருந்தது. அவர் சரியானதற்கும் தவறானதற்கும் இடையிலும், உண்மைக்கும் உண்மை அல்லாதவற்றிற்கும் இடையிலும் உள்ள வித்தியாசத்தைக் கோடிட்டுக் காட்டி விளக்குபவராக இருந்தார். அந்த நெறி நீதி தீர்ப்பவர் தோன்றா விட்டால் தவறான கருத்துக்கள் அதிகமாக நுழைந்திருக்கும்.

எவ்வாறிருப்பினும், முஸ்லிம்களுக்கு மத்தியில் ஒரு அசைவு அப்போது உருவானது. அவர்களில் ஒரு சாராருக்கு மார்க்கத்தில் ஆர்வம் ஏற்பட்டது. அந்த ஆர்வம் வளர்ந்தது. இந்த ஆர்வமும் கூட உண்மையில் மக்கள் மத்தியில் உருவாகியிருந்த அமைதியின்மையை அகற்றுவதற்காகவே இருந்தது. இதுவும் இந்தக் காலத்தில் இறைவனின் விதிக்கு ஏற்பவே நடந்தது. அதன் மூலம் மக்கள் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்ட அவனது தூதரைத் தேட வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு நடந்தது. சில மக்கள் மீது அல்லாஹ்வின் அருள் இருந்தது. இப்போதும் இருந்து வருகிறது. அவர்கள் தங்களது தேடுதல்களில் வெற்றி பெறுகின்றார்கள். சிலர் தவறான மக்களின் சைகையின் கீழ் வந்து விட்டதால் இந்த அமைதியின்மையை அகற்றுவதற்கான வழிகளைத் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு தேடிக் கொண்டிருக்கும் நிலையிலேயே இந்த உலகை விட்டு சென்று விடுகின்றார்கள். இங்கு என்னிடம் பைஅத் செய்கின்றவர்கள் தொடர்பான சம்பவங்கள் வரும் போது நல்லியல்புள்ள ஆன்மாக்கள் எந்த அளவு நிம்மதியில்லாமல் இருந்தார்கள். உண்மையைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்கள் எப்படி துடித்தார்கள். பிறகு அல்லாஹ் அவர்களுக்கு எவ்வாறு வழிகாட்டினான் என்பது தெரிய வருகிறது. இந்த வழிகாட்டலைப் பற்றி சிலர் அவை தற்செயலாக நடந்தவை தான் எனக் கூறுகின்றார்கள். ஆனால் உண்மையில் இது எவருக்கு அவன் விரும்புகின்றானோ அவருக்கு அவன் நேர்வழியைக் காட்டுகின்றான் என்ற இறைவனின் அறிவிப்பு உண்மையானது என்பதை நிரூபிக்கின்றது.

அப்படிப்பட்ட எண்ணற்ற சம்பவங்களை ஏதாவதொரு சமயத்தில் நான் எடுத்துக் கூறுவேன். கடந்த ஜுமுஆவில் நான் சஹாபாக்களின் சம்பவங்களை எடுத்துக் கூறியிருந்தேன். எந்த இறைவன் இதற்கு முன்னர் வழிகாட்டினானோ இன்றும் அதே இறைவன் தான் வழிகாட்டிக் கொண்டிருக்கின்றான் என்பது உலகிற்கு தெரிய வரும் என்பதற்காகவே அச்சம்பவங்களைக் கூறினேன். அஹ்மதிய்யத்தின் முன்னேற்றம், இஸ்லாத்தின் அழகிய போதனைகளை அஹ்மதிய்யத் மூலமாக பரவிக் கொண்டிருப்பது ஆகியவற்றைப் பார்த்து நல்லியல்புள்ள முஸ்லிம்கள் நாள்தோறும் உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தின் மடியில் வந்து அமர்வதைப் பார்த்து சில முஸ்லிம் அரசாங்கங்களும் கூட அஹ்மதிய்யத்தை எதிர்ப்பதற்காக மவ்லவிமார்களுக்கு பணம் கொடுத்து உலகின் பல பகுதிகளுக்கு அவர்களை அனுப்பி வைக்க முயற்சி

செய்தது. ஆப்பிரிக்க நாடுகளில் இதற்கான மத்ரஸாக்கள் திறக்கப்பட்டன. இப்போதும் திறந்து கொண்டிருக்கின்றார்கள். இஸ்லாமிக் யுனிவர்சிட்டி என்ற பெயரில் சில நிறுவனங்களையும் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். இதற்காக ஓரளவு அரசாங்கங்களின் பணம் செலவழிக்கப்படுகிறது. ஏழை நாடுகள், முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் அல்லது வளர்ச்சி பெறாத நாடுகள் ஆகியவற்றின் அரசாங்கங்கள் இவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. இதன் மூலம் மேலும் செல்வம் வந்து நாட்டின் வாழ்வாதாரம் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்கின்றார்கள். ஆனால் இந்த பெயர் தாங்கி ஆலிம்கள் இந்த நாடுகளில் தப்லீக் செய்வதற்காக செல்லும் சாக்கில் தப்லீக் மையங்கள் என்ற பெயரில் இஸ்லாத்தைப் பரப்புவதிலும் முஸ்லிம்களுக்கு தர்பிய்யத் வழங்குவதிலும் மிகவும் குறைவான முயற்சியைத்தான் செய்துள்ளார்கள். ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக பெரும் திட்டங்கள் தீட்டி அதை செயல்படுத்துவதன் பக்கம் அதிக கவனம் செலுத்தி வருகின்றார்கள்.

இல்லா மாஷா அல்லாஹ் இவர்கள் தங்கள் முயற்சியில் தோல்வியையே தழுவி வருகின்றார்கள். இப்போதும் தோல்வியையே தழுவி வருகின்றார்கள். இதற்கு முன்னரும் தோல்வியையே தழுவினார்கள். இந்த சூழ்நிலையில் சில நாடுகளில் சில இடங்களில் ஏழைகளின் பொருளாதார நிலை மேம்பட்டது. இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தூதுச் செய்தி மூலம் மக்களுக்கு தெளிவாகத் தெரியும் போது அவர்கள் ஒருமுறை அந்த தூதுச் செய்தியை நன்றாகப் புரிந்து கொண்டால் பிறகு மார்க்கத்தின் மீது பற்றுள்ள ஒவ்வொரு நபரும் இந்த தூதுச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார். இதற்காக எல்லா விதமான தியாகங்களையும் செய்ய அவர் தயாராகி விடுகின்றார். எந்த ஒளி இறைவனிடமிருந்து வருகின்றதோ அதை அடியாரால் எதிர்த்து நிற்க முடியாது. எந்த மனித முயற்சியும் அதற்கு எதிராக நிற்க முடியாது. இஸ்லாத்திற்கு தொண்டு செய்கின்றோம் என்ற பெயரில் செல்வம் படைத்த அரசாங்கங்கள் அஹ்மதிய்யத்திலிருந்தும் மக்களை விலக்கி வைப்பதற்காக எவ்வளவு முயற்சி செய்தாலும் ஒவ்வொரு அறிவுள்ள மனிதன் மீதும் உண்மையும் பொய்யும் தெளிவாக வெளிப்பட்டு விடும். **உலக முயற்சிகள் இறைவனின் பெயரால் செய்யப்பட்டாலும் இது இறைவனின் நாட்டத்திற்கு மாற்றமானதாக இருந்தால் அதில் பரக்கத் ஏற்பட முடியாது. அல்லாஹ்வின் உதவிகள் யாருடன் இருக்குமோ அவரது பணிகளில் தான் பரக்கத் ஏற்படும். நல்ல பணிகளில் நல்ல விளைவும் ஏற்படும்.**

நம்முடைய முபல்லிக்குகளும், முஅல்லிம்களும் இந்தப் பகுதியில் வாழும் அஹ்மதிகளும் ஒவ்வொரு நொடியும் இறை உதவியின் இந்த காட்சிகளைப் பார்ப்பதன் மூலம் அவை அவர்களது ஈமானை அதிகரிக்கச் செய்கின்றது. மேலும் உதயமாகின்ற ஒவ்வொரு நாளிலும் இந்த இறை உதவியின் காட்சிகள் அவர்களது ஈமானுக்கு வலுவூட்டிக் கொண்டிருக்கின்றன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனக்கு ஆதரவாக இறைவன் காட்டியுள்ள ஒரு அற்புதமான அடையாளத்தைப் பற்றி கூறியுள்ளார்கள். அந்த அடையாளம் ஒவ்வொரு நாளும் பூர்த்தியாகிக் கொண்டிருக்கின்றது.

**பராஹீனே அஹ்மதிய்யாவிலுள்ள முன்னறிவிப்புகளைப் பற்றி கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த நூலான பராஹீனே அஹ்மதிய்யாவில் அல்லாஹ் எனக்கு ஒரு துஆவைக் கற்றுத் தந்துள்ளான். அதாவது இல்ஹாமாக அந்த துஆ எனக்கு இறங்கியது. அது **ரப்பி லா தஸர்னீ ஃபர்தன் வஅன்த கைருல் வாரிசீன்** என்ற துஆவாகும். அதாவது, என் இறைவா! என்னை தனியாக விட்டு விடாதே. ஒரு ஜமாஅத்தை உருவாக்குவாயாக என்பதாகும்.

பிரிதோரிடத்தில் அவன், யஃதீக மின் குல்லி வஜ்ஜின் அமீக் – விருந்தினருக்கு தேவையான செல்வங்களும் சாமான்களும் எல்லா தரப்பிலிருந்தும் வருவதற்கு அல்லாஹ் ஏற்பாடு செய்வான் என்று எனக்கு வாக்குறுதி வழங்கியுள்ளன். ஒவ்வொரு வழி மூலமாகவும் அவை உன்னிடம் வந்து சேரும் என்று அவன் என்னிடம் கூறியுள்ளான்.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

இப்போது சிந்தனை செய்து பாருங்கள். எந்தக் காலத்தில் இந்த முன்னறிவிப்பு வெளியிடப்பட்டதோ அல்லது மக்களுக்கு கூறப்பட்டதோ அந்த சமயத்தில் எந்த நபராவது இங்கு வந்தாரா? நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். அப்போதும் என்னைப் பற்றி எவருக்கும் தெரியாது. சில சமயம் ஒரு வருடத்தில் ஒரு கடிதம் கூட வராமல் அல்லது ஒரு விருந்தாளி கூட என்னிடம் வராத நிலையும் இருந்திருக்கின்றது.

பிறகு எண்ணிக்கை அதிகமானதும் தூய உள்ளம் கொண்டவர்கள் வந்ததும் அவர்களிடம் பைஅத் செய்ததும் எப்படிப்பட்ட அடையாளம் என்றால், அது ஒவ்வொரு நாளும் நிறைவேறிக் கொண்டிருக்கின்றது. இன்றும் இறைவனின் இந்தக் காட்சியை நாம் பார்க்கின்றோம். எல்லா தரப்பிலும் முழுமையான வலுவான எதிர்ப்பு இருந்தும், சிலர் முர்தத்துகளின் முயற்சிகள் இருந்தும் உலக பேராசை அவர்களை மார்க்கத்திலிருந்து விலக்கி வைத்திருந்த பிறகும் கூட அல்லாஹ்வின் அருளால் எனக்கு நாள்தோறும் வரும் கடிதங்களில் தொடர்ச்சியாக சில சமயங்களில் டஜன் கணக்கிலும், சில நேரங்களில் நூற்றுக்கணக்கிலும் சில நேரங்களில் ஆயிரக்கணக்கிலும் பைஅத் நடந்துள்ள நற்செய்திகளை நான் படிக்கின்றேன். பைஅத் படிவமும் வந்துள்ளன. ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சில சம்பவங்களும் உள்ளன. அவற்றைப் பார்க்கும் போது இறைவனைத் தவிர உள்ளத்தில் இப்படிப்பட்ட நிலையை வேறு யாராலும் ஏற்படுத்த முடியாது என்பது தெரிய வருகிறது. இதுவே புதிதாக பைஅத் செய்துள்ளவர்களின் உணர்வாகும்.

ஐரோப்பாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் சிலர் என்னை சந்தித்தார்கள். அவர்கள் எப்படி அஹ்மதியானார்கள் என்று அவர்களிடம் கேட்ட போது அவர்கள், எங்களுக்கு ஒரு அஹ்மதியல்லாத முஸ்லிம் நண்பர் மூலம் இஸ்லாத்தின் பால் கவனம் ஏற்பட்டது. அல்லது எங்களுக்கு முதலில் இஸ்லாத்தின் பக்கம் கவனம் ஏற்பட்டது. பிறகு அந்த அஹ்மதியல்லாத முஸ்லிம் நண்பருடன் தொடர்பு ஏற்பட்டது. இவ்வாறு தொடர்பு ஏற்பட்ட பிறகு நாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டோம். ஆனால், நாங்கள் ஏற்றுக் கொண்ட மார்க்கத்தில் எங்களுக்கு நிச்சய உறுதி இல்லாத நிலைமை இருந்தது. நிம்மதியற்ற நிலை இருந்தது. பிறகு அல்லாஹ் எங்கள் மீது அருள் செய்தான். தற்செயலாக அஹ்மதிய்யத்தைப் பற்றிய அறிமுகம் எங்களுக்கு கிடைத்தது. பிறகு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை என்றாகி விட்டது. பிறகு இந்த உண்மை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதே சரியானது என்று நாங்கள் முடிவு செய்தோம் என்று கூறினார்கள். இதன் மூலமே எங்களது உள்ளத்திற்கு நிம்மதி கிடைத்தது என்று அவர்கள் கூறினார்கள்.

இவ்வாறே முஸ்லிம்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான மக்கள் தங்களது நல்லியல்பு காரணமாக உண்மையைத் தேடுகின்ற போது உண்மை அவர்களுக்கு வெளிப்பட்டு விடுகிறது. உடனே அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்கின்றார்கள். முஸ்லிம்களிலிருந்து எவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்கின்றார்களோ அவர்கள் உண்மை இஸ்லாம் எனக்கருதி அதை ஏற்றுக் கொள்ளும் போது அவர்களது குடும்பத்தினர், சுற்றுச்சூழல் ஆகியவற்றின் காரணமாக பெரும் பெரும் துன்பங்களைச் சந்திக்க வேண்டியது வருகிறது. சில சமயங்களின் மிகவும் கொடூரமான துன்பங்களைக் கடந்து செல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. ஆனால் அல்லாஹ்வின் அருளால் எப்போதும் உறுதியான பாதங்களுடன் உண்மையில் அவர்கள் நிலைத்து நிற்பதைப் பார்க்க முடிகின்றது. இவ்வாறு உறுதியாக நிலை நிற்பதற்காக துஆ செய்யும்படி அவர்கள் எனக்கு எழுதிக் கொண்டிருக்கின்றனர். உண்மையை அடையாளம் கண்டு கொண்ட பிறகு அதை விட்டு விலகி பாவிகளாக ஆகிவிடக் கூடாதே எனபதற்காகத்தான் அவர்கள் உண்மையில் உறுதியாக நிலைநின்றனர். தங்களது ஆலிம்களின் நிலையைப் பார்க்கும் போது அவர்களது சொல்லிலும் செயலிலும் முரண்பாடு இருப்பதை அவர்கள் பார்க்கின்றார்கள். மாற்று மதத்தவர்கள் செய்யும் ஆட்சேபணைகளுக்கு பதில் கூறுவதற்குரிய அறிவு அவர்களிடம் இல்லை என்பதை அவர்கள் அறிந்து கொண்டனர். இந்த நேரத்தில் தற்காப்பு நடவடிககையில் ஈடுபடுவது ஒருபுறமிருக்கட்டும். சில சமயங்களின் எதிரிகளின் கூற்றுக்கு இவர்கள் ஆமாம் போடுகிறார்கள். அல்லது இந்த மக்களுடன் விவாதம் செய்ய வேண்டிய தேவை இல்லை. இது இஸ்லாத்திற்கு புறம்பான விஷயம் என்று கூறி விடுகின்றனர். குறிப்பாக அரபு

நாட்டிலுள்ள பெரும்பாலானவர்கள் இந்த உண்மையைப் புரிந்து கொண்டார்கள். இவர்களில் எவர்களுக்கு M.T.A. –வுடன் தொடர்பு ஏற்பட்டு விட்டதோ அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாமல் இருந்தாலும் கிறித்தவ பாதிரிமார்கள் செய்யும் ஆட்சேபணைகளுக்கான பதில்களை எந்த அளவு தெளிவாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆலிம்கள் எடுத்து வைத்து ஆட்சேபணை செய்பவர்களின் வாயை அடைக்கின்றார்களோ அதுபோன்று பதில் கூறுகின்ற வேறு எவரும் எங்களுக்குத் தெரியவில்லை என்பதை கூறி வருகின்றனர். அவர்களது ஆலிம்கள் இதற்கு அருகில் கூட வர முடியவில்லை. இஸ்லாத்தின் மீது எண்ணற்ற ஆட்சேபணைகளைக் கேட்டு கேட்டு நிம்மதியிழந்து இருந்தோம். அதற்காக துஆ செய்து கொண்டிருந்தோம். எங்களது இந்த நிம்மதியின்மையை அல்லாஹ் அகற்ற வேண்டும் என்று நாங்கள் துஆ செய்தோம். பிறகு அல்லாஹ் எங்களது துஆக்களைக் கேட்டு தற்செயலாக ஒரு நாள் எங்களுக்கு M.T.A –வைக் காட்டினான். அஹ்மதி ஆலிம்கள் இஸ்லாத்தின் மீது ஆட்சேபணை செய்பவர்களுக்கு தெளிவான பதிலைக் கூறியிருந்தார்களோ அதன் காரணமாக ஆட்சேபணை செய்தவர்களின் வாயை அடைத்து விட்டதால் அந்த பெருமையில் எங்கள் தலை நிமிர்ந்து நின்றது. நாங்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டோம் என்று பலரும் தங்கள் கடிதங்களில் எழுதியுள்ளார்கள். நான் ஏற்கனவே கூறியது போன்று பிரிதொரு சந்தர்ப்பத்தில் நான் இப்படிப்பட்ட சம்பவங்களைத் தொகுத்துக் கூறுவேன். இப்போது அல்ஹுதா என்ற தமது நூலில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆட்சியாளர்களின் நிலைமைகள் தொடர்பாகவும் பல்வேறு தரப்பிலுள்ள மக்களின் நிலைமை தொடர்பாகவும் எடுத்துக்கூறி அவர்களுக்கு கவனமூட்டியுள்ள விஷயங்கள் பற்றி கூற இருக்கிறேன். அதிலிருந்தும் சில பகுதிகளை நான் உங்கள் முன் வைக்கின்றேன். அந்த காலத்தில் முஸ்லிம்களின் நிலை எவ்வாறிருந்தது என்பது பற்றியும் கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

முஸ்லிம்களில் சீர்குலைவு ஏற்பட்டு விட்டது. நல்ல மக்களிடமிருந்து நன்மை மறைந்து விட்டது. அவர்களிடம் நல்லொழுக்கமும் இல்லை. இஸ்லாமும் இல்லை. பெரியவர்களிடம் காணப்படும் அனுதாப உணர்வும் இல்லை. தங்களது மிகப் பிரியமான நண்பர்களிடம் கூட தீமையுடன் பரிமாறுவதை விட்டும் அவர்கள் விலகவில்லை. தங்களது நெருங்கிய தூய நண்பர்களுக்குக் கூட அவர்கள் கொதிக்கின்ற நீரையே வழங்குகின்றனர். அதாவது அவர்களுக்கு பெரும் துன்பத்தை தருகின்றனர். தனது சகோதரராக இருந்தாலும் தந்தையாக இருந்தாலும் அல்லது வேறு உறவினராக இருந்தாலும் அவர்கள் செய்த நன்மைக்குப் பதிலாக அதில் பத்தில் ஒரு பங்கைக் கூட மீண்டும் அவர்களுக்கு நன்மை செய்வதன் மூலம் வழங்குவதில்லை. எந்த நண்பரிடத்திலும் உடன்பிறந்த சகோதரர்களிடத்திலும் உண்மையான அன்பை செலுத்தவில்லை. அனுதாபம் காட்டுபவர்களின் மிகப்பெரும் கருணையைக் கூட அவர்கள் அற்பமாகக் கருதுகின்றார்கள். தனக்கு நன்மை செய்தவர்களுக்கு நன்மை செய்வதில்லை. தனக்கு எவ்வளவு நன்கு தெரிந்த நபராக இருந்தாலும் அவரோடு பரிவுடன் நடந்து கொள்வதில்லை. தனது நண்பர்களுக்குக் கூட தங்களது பொருள்களைக் கொடுப்பதில் கஞ்சத்தனம் காட்டுகின்றனர். நீங்கள் மீண்டும் மீண்டும் இவர்களது முகங்களைப் பார்த்தால் இந்த சமுதாயத்தைச் சார்ந்த ஒவ்வொரு பிரிவினரும் குழப்பம், நேர்மையின்மை, வெட்கங்கெட்ட தன்மை ஆகியவற்றின் ஆடையை அணிந்திருப்பதை நீர் காண்பீர். நமது காலத்தைச் சேர்ந்த அரசர்கள், மற்ற மக்கள் ஆகியோரின் நிலைமைகள் பற்றியும் இவ்விடத்தில் எழுதுகின்றேன். அவர்கள் தங்கள் மன இச்சையை வணங்குபவர்களாக உள்ளனர்.

**பிறகு அரசர்களின் நிலைமை தொடர்பாக இவ்வாறு எழுதுகின்றார்கள்:**

அறீவீராக. இறைவன் உம்மீது கருணை காட்டட்டும். (அரபியிலுள்ள இந்த வாசகங்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களே உர்துவில் மொழியாக்கம் செய்துள்ளார்கள் – ஹுஸீர்.)

இந்த காலத்திலுள்ள பெரும்பாலான அரசர்களும் செல்வம் படைத்தவர்களும் மார்க்கப் பெரியார்களாகவும் மார்க்கத்திற்கு உதவி செய்பவர்களாகவும் கருதப்படுகின்றனர். ஆனால், இவர்கள் எல்லாரும் தங்களது முழுமையான தைரியத்தைப் பயன்படுத்தி உலகின் பக்கம் குனிந்து இருத்தல், மன

இச்சைகளைப் பின்பற்றிச் செல்லுதல், ஆகியவற்றைத் தவிர அவர்களுக்கு வேறு எந்த வேலையும் இல்லை. அவர்கள் அழிந்து போகின்ற துன்பங்களைப் பெறுவதற்காக கருவூலங்களை செலவு செய்கின்றனர். அவர்கள் நதிகளின் ஓரத்திலும் ஓடுகின்ற தண்ணீரிலும் உயர்ந்த மரங்கள், கனிதரும் மரங்கள் ஆகியவற்றின் கீழ் அமர்ந்தும் மிக உயர் தரமான இருப்பிடங்களில் அமர்ந்தும் மது அருந்துகின்றனர். குடிமக்கள் மீதும் சமுதாயத்தின் மீதும் எத்தகு பெரும் துன்பங்கள் வந்துள்ளன என்பதைப் பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது அவர்களுக்கு அரசியல் விஷயங்கள் தொடர்பாகவும் மக்களது பிரச்சனைகள் தொடர்பாகவும் எந்த அறிவும் இல்லை. தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளுதல், அறிவு, அனுமானம் ஆகியவற்றிலிருந்தும் எந்த பங்கையும் அவர்கள் பெறவில்லை. அல்லாஹ் தடுத்தவற்றின் பக்கம் அவர்கள் செல்கின்றார்கள். அதிலிருந்தும் அவர்கள் தப்பித்துக் கொள்வதில்லை. அரசாங்க கடமைகளை நிறைவேற்றுவதில்லை. இறையச்சம் உள்ளவர்களாக ஆவதில்லை. இதன் காரணமாகவே தோல்விக்கு மேல் தோல்வியை அவர்கள் பார்க்கின்றார்கள். ஒவ்வொரு நாளும் வீழ்ச்சியின் பக்கம் செல்கின்றனர். ஏனென்றால், அவர்கள் விண்ணைப் படைத்த அந்த இறைவனை வெறுப்படையும்படி செய்தார்கள். அவர்களிடம் எந்தத் தொண்டு ஒப்படைக்கப்பட்டதோ அதற்குரிய எந்த உரிமையையும் அவர்கள் செலுத்தவில்லை. அவர்கள் பூமியின் பக்கம் குனிந்து விட்டனர். முழுமையான தக்வாவிலிருந்தும் அவர்களுக்கு என்ன பங்கு கிடைத்தது? இதனால் அவர்களை எதிர்த்து நிற்கும் ஒவ்வொரு எதிரியின் மூலம் அவர்கள் தோல்வியைத் தழுவினார்கள். அதிகமான எண்ணிக்கையில் படையும், செல்வமும், பலமும் இருந்தும் கூட அவர்கள் வெருண்டோடுகின்றனர். இவையனைத்தும் விண்ணிலிருந்து அவர்கள் மீது பொழிகின்ற அந்த சாபத்தின் விளைவேயாகும். ஏனென்றால், அவர்கள் இறைவனை விட தமது சுய விருப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கினார்கள். அவர்கள் அற்பமான உலக விஷயங்களுக்கு அல்லாஹ்வை விட முன்னுரிமை வழங்கினார்கள். உலகின் அழிந்து போகக்கூடிய இன்பங்கள், கேளிக்கைகள், விளையாட்டுகள் ஆகியவற்றின் மீது பேராசை கொண்டவர்களாக அவர்கள் ஆகிவிட்டார்கள். அத்துடன் சுயநலம், ஆணவம், தன்னைப் பெரிதாகக் காட்டிக் கொள்ளுதல் ஆகிய தூய்மையற்ற குறைகளின் கைதிகளாக அவர்கள் ஆகிவிட்டார்கள். மார்க்கத்தைப் பேணுவதில் சோம்பேறிகளாகவும், தோல்வி அடைந்தவர்களாகவும், மோசமான விருப்பங்களை அடைவதில் தந்திரக்காரர்களாகவும், சுறுசுறுப்பானவர்களாகவும் அவர்கள் இருக்கின்றார்கள். தங்களது சுய விருப்பங்கள் மீது அவர்களுக்கு அன்பு ஏற்பட்டு விட்டது. தங்களது குடிமக்களையும் மார்க்கத்தையும் அவர்கள் மறந்து விட்டனர். பொதுமக்கள் பற்றிய எண்ணமும் அவர்களுக்கு இல்லை. மார்க்கம் பற்றிய எண்ணமும் இல்லை. அதற்குரிய உரிமையை முழுமையாக அவர்கள் செலுத்தவில்லை. பைத்துல் மால் –ஐ தங்களது மூதாதையர்களிடமிருந்துள்ள சொத்திலிருந்து கிடைத்த செல்வமாக அவர்கள் கருதுகின்றார்கள். தக்வாவின் நிபந்தனைக்கேற்ப அந்த செல்வத்தை தங்களது குடிமக்களுக்காக செலவு செய்வதில்ல. அவர்களிடம் கேள்வி கேட்கப்படமாட்டாது என அவர்கள் கருதுகின்றார்கள். இறைவன் பக்கம் நாம் திரும்பிச் செல்லமாட்டோம் என்று எண்ணுகின்றார்கள். எனவே, அவர்களின் செல்வத்தின் காலகட்டம் கவலை அளிக்கக்கூடிய கனவு போன்று கழிந்து விட்டது. அவர்கள் செய்திருப்பவற்றை பற்றி நீங்கள் தெரிந்திருந்தால் உங்களது மேனி மெய் சிலிர்த்து விடும். வியப்பு உங்களை மிகைத்து நிற்கும். எனவே கவனமாக சிந்தனை செய்யுங்கள். இவர்களா மார்க்கத்திற்கு வலுவூட்டக்வடியவர்களாகவும் அதற்கு உதவி செய்பவர்களாகவும் இருக்க முடியும்? இந்த மக்களா வழி தெரியாதவர்களுக்கு வழி காட்டுவார்கள்? இவர்களா குருடர்களுக்கு சிகிச்சை அளிப்பார்கள்?

இதுதான் இந்த அரசர்களின் நிலைப்பாடும் ஆகும். நான் ஏற்கனவே கூறியது போன்று ஆப்பிரிக்க நாடுகளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது இயக்கத்தை தோல்வி அடையச் செய்வதற்கு இவர்கள் பெரு முயற்சி செய்கின்றனர். ஆனால் தனது செல்வத்திலிருந்து ஆயிரத்தில் ஒரு பங்கைக் கூட அவர்கள் இதற்காக செலவழிப்பதில்லை. பெட்ரோல் வளம் இவர்களிடம் இருக்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இயக்கத்தை எதிர்ப்பதற்காக மிகச் சிறு தொகையை செலவிட்டவாறு தங்களது பிரச்சாரகர்களை அவர்கள் அனுப்பி வைத்துள்ளார்கள். முதலில் அவர்களுக்கு இது பற்றிய எண்ணம் வரவில்லை.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இவர்களுக்கு ஷரீஅத்தின் கட்டளைகளுடன் என்ன தொடர்பு இருக்கின்றது? மாறாக, அந்த சிறைச்சாலையிலிருந்து விடுபட்டு முழுமையான சுதந்திரத்துடன் வாழ்வதையே அவர்கள் விரும்புகின்றார்கள். உண்மையான கலீஃபாக்களிடம் இருந்த உறுதியான எண்ணத்தின் ஆற்றல் அவர்களிடம் எங்கு இருக்கின்றது? உண்மையுடனும், நீதியுடனும் இணைந்திருந்த இறையச்சமுள்ள நல்லடியார்களிடம் இருந்த உள்ளம் அவர்களிடம் எங்கு இருக்கின்றது? மாறாக, இன்று கிலாஃபத்தின் சிம்மாசனம் இந்த நற்பண்புகளிலிருந்தும் காலியாக இருக்கின்றது.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

சமுதாயத்தின் காற்று நின்று விட்டது. அதன் தீபம் அணைந்து விட்டது. அந்த சமுதாயத்தின் தூதர் பொய்ப்படுத்தப்படுகின்றார். அவர் சரி என்று கூறியவை தவறு என்று கூறப்படுகிறது. இதைப் பற்றி இவர்களுக்கு உணர்வேயில்லை. மாறாக, இவர்களில் பலரும் இறைவனால் தடுக்கப்பட்டவற்றின் மீது பிடிவாதமாக அமர்ந்திருக்கின்றார்கள். மிகவும் தைரியத்துடன் தங்களது விருப்பங்களை இறைவன் தடைசெய்துள்ள பெண்களுக்கு மத்தியில் கொண்டு செல்கின்றனர். அதாவது இறைவன் தடுத்துள்ள வெட்கங்கெட்ட செயல்களை எல்லாருக்கும் தெரியும் விதத்தில் செய்கின்றனர். இவர்களது மகிழ்ச்சியான வாழ்க்கை காலையிலும் மாலையிலும் எல்லா விதமான இன்பங்களிலிலும் கழிகிறது. பாவம் நிறைந்த தீய செயல்களை செய்யும் இப்படிப்பட்ட மக்களுக்கு இறைவனிடமிருந்து எப்படி உதவி கிடைக்க முடியும்? மாறாக இந்த இன்பங்களை விரும்புகின்ற கவனமற்ற அரசர்கள், முஸ்லிம்கள் மீது இறைவன் இறக்கியுள்ள அவனது மிகப்பெரும் கோபமாக இருக்கின்றது. அவர்கள் தூய்மையற்ற கிருமிகள் போன்று பூமியோடு ஒன்றிவிட்டார்கள். தங்களது முழு ஆற்றலையும் இறைவனின் அடியார்களுக்காக இவர்கள் செலவு செய்வதில்லை. நொண்டி ஒட்டகம் போன்று இவர்கள் ஆகிவிட்டார்கள். சுறுசுறுப்பான புத்திசாலி குதிரைகளாக இவர்கள் ஓடவில்லை. இதன் காரணமாகவே விண்ணின் உதவி அவர்களோடு இருக்கவில்லை. காஃபிர்களின் கண்களிலும் இவர்களைப் பற்றிய அச்சமும் திகிலும் இல்லாமல் ஆகி விட்டது. ஆனால், அதுதான் இறையச்சமுள்ள அரசர்களின் சிறப்புத் தன்மையாக இருந்தது. சிங்கத்தைக் கண்டு கழுதை வெருண்டோடுவது போல் இவர்கள் காஃபிர்களைக் கண்டு ஓடுகின்றார்கள். போர்க்களத்தில் இவர்களில் இரண்டாயிரம் பேர்கள் இருந்தாலும் அவர்களை எதிர்கொள்ள இரண்டு காஃபிர்கள் போதும். இத்தகு நம்பிக்கை துரோகமும், வழிகேடும் இவர்களிடம் இருக்கும் போது இவர்களுக்கு இறைவனிடமிருந்து எப்படி உதவி கிடைக்கும்? எனவே, அல்லாஹ் தனது நிரந்தரமான நடைமுறையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த மாட்டான். அவனது நடைமுறை என்னவென்றால், அவன் காஃபிருக்கு உதவியை வழங்குவான். ஆனால், தீயவர்களுக்கு ஒருபோதும் உதவி செய்யமாட்டான். இதன் காரணமாகவே நஸ்ரானியாக இருக்கக்கூடிய அரசர்களுக்கு உதவி கிடைக்கின்றது. அவர்கள் இவர்களது எல்லைகள் மீதும் நாடுகள் மீதும் ஆதிக்கம் செலுத்துகின்றனர். ஒவ்வொரு பிரதேசத்தையும் அவர்கள் ஆக்கிரமித்து விட்டனர்.

இதனை வெளிப்படையாக இன்று நீங்கள் பார்க்காவிட்டாலும் செயலளவில் பார்க்கும் போது மற்றவர்களது கைகளில்தான் முஸ்லிம் நாடுகள் மற்றும் அரசர்களின் கடிவாளம் இருப்பதை நாம் பார்க்கின்றோம். இவர்களது வாழ்வாதாரம் அவர்களது கைகளில் இருக்கின்றது.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

இறைவன் கருணையுள்ளவனாக இருப்பதால் அவர்களுக்கு உதவவில்லை. மாறாக, அந்த இறைவனின் கோபம் முஸ்லிம்கள் மீது இருப்பதால்தான் அவர்களுக்கு அவன் உதவி செய்தான். அந்தோ! முஸ்லிம்கள் இதை அறிந்திருக்க வேண்டும்.

இந்த வேதனை அவர்களுக்கு இருந்தது. உண்மையை விரும்புகின்ற பத்திரிகைகளில் கட்டுரை எழுதக்கூடியவர்கள், அவர்கள் இன்று இந்த உண்மையை எழுதியுள்ளார்கள். கடந்த சில நாட்களுக்கு முன்பு

ஜங் என்ற பத்திரிகையில் டாக்டர் அப்துல் கதீர் கான் சாஹிப் என்ற பாகிஸ்தானி விஞ்ஞானி இவ்வாறு எழுதியிருப்பதை நான் படித்தேன். திருக்குர்ஆன் வசனங்களின் ஒளியில் அவர் இந்த கருத்துக்களை எழுதியுள்ளார். இன்னின்ன செயல்களை நாம் செய்த காரணத்தால் அல்லாஹ்வின் தண்டனை நம்மீது இறங்கியுள்ளது என்று அவர் எழுதியுள்ளார். இதுதான் இவர்களது நிலை. இவர்கள் இறையச்சம் உள்ளவர்களாக இருந்திருந்தால் எதிரிகள் இவர்கள் மீது எவ்வாறு வெற்றி பெற முடியும்? மாறாக, எப்போது அவர்கள் துஆவையும் இபாதத்தையும் கைவிட்டு விட்டார்களோ அப்போது இறைவனும் அவர்களைப் பற்றி சிறிதும் கவலைப்படவில்லை. இறைவனுடன் செய்துள்ள உடன்படிக்கையை முறித்தாலும் திருக்குர்ஆன் நிர்ணயித்துள்ள வரம்புகளுக்கு அவமரியாதை செய்த காரணத்தால் அபாயகரமான துன்பங்கள் அவர்கள் மீது இறங்கிக் கொண்டிருக்கின்றன. பல நகரங்களும் அவர்களது கைகளை விட்டும் நழுவிவிட்டன. இவை எல்லாமே இறைவனிடமிருந்து வந்துள்ள தண்டனையும் பிடியுமாகும். எதிரிகள் அவர்களை இழிவடையச் செய்யவில்லை. மாறாக, இறைவனே அவர்களை இழிவடையச் செய்தான். ஏனென்றால், இறைவனின் கண்களுக்கு முன்னால் அவர்கள் கீழ்ப்படியாமல் இருந்து வந்தனர். எனவே, இறைவன் அவர்களுக்கு காட்ட வேண்டியவற்றை காண்பித்தான். அவர்களை ஆபத்துகளில் விட்டுவிட்டான். அவர்களை காப்பாற்றவில்லை. அவர்களது அமைச்சர்கள் நேர்மையற்றவர்களாகவும் நம்பிக்கைத் துரோகிகளாகவும் இருக்கின்றார்கள்.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

ஐரோப்பாவிலுள்ள பத்திரிகைகள் அவர்களை சோம்பேறிகள் என்றும் தகுதியற்றவர்கள் என்றும் எழுதியிருக்கின்றது.

இது இன்றும் உண்மையாகவே இருக்கின்றது.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

ஆண் மகனிடமுள்ள சிறப்புகள் அவர்களிடம் இல்லாமல் ஆகி விட்டது. தொழுகையை அவர்கள் பேணுவதில்லை. சுய விருப்பங்கள் அவர்களது வழியில் பாறாங்கற்களாகவும் தடைகளாகவும் ஆகிவிட்டன. அவர்கள் தொழுதாலும் கூட பெண்களைப் போல வீடுகளில் தொழுகின்றார்கள். இறையச்சமுள்ளவர்களைப் போன்று அவர்கள் பள்ளிவாசல்களுக்கு வருவதில்லை. எந்த அறிவுரையையும் அவர்களால் கேட்க முடியாது. உடனடியாக கர்வமும் தற்பெருமயின் கவுரவமும் அவர்களை உணர்ச்சிவசப்பட வைக்கின்றது. கோபத்தாலும் தன்மான உணர்வாலும் அவர்களது முகங்கள் சிவந்து விட்டன. அவர்களது பார்வையில் எவர்கள் அவர்களது நிலையை அவர்களுக்கு அழகாக்கிக் காட்டுகின்றவர்களாகவும் அவர்களது செயல்களை புகழ்பவர்களாகவும் இருக்கின்றார்களோ அவர்களே கண்ணியத்திற்குரியவர்கள்.

அதாவது அவர்களை புகழ்வது அவர்களுக்கு மிகவும் பிடிக்கும்.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

இறைவன் இவர்களது தீமையையும், அநீதியையும், பொய்யையும், அகங்காரத்தையும் நன்றிகேடு காட்டுதலையும் பார்த்து எப்படிப்பட்டவர்களை அவர்கள் மீது ஆட்சேபணை செலுத்த வைத்து விட்டான் என்றால் அவர்கள் இவர்களது சுவர்களை தாண்டி ஒவ்வொரு மேடான இடத்திலும் ஏறி விட்டனர். அவர்களது மூதாதையர்களின் சொத்துக்களை அபகரித்துக் கொண்டனர். ஒவ்வொரு பிரதேசத்தையும் தங்கள் பிடியின் கீழ் கொண்டு வந்தனர். இவை எல்லாம் நடக்க வேண்டியது இருந்தது. நீங்கள் திருக்குர்ஆனில் இந்த விஷயங்களை படிக்கின்றீர்கள். ஆனால், நீங்கள் சிந்திப்பதில்லை.

நான் கூறியது போன்று இவர்களது வாழ்வாதாரமாக விளங்கும் ஒவ்வொரு பொருளும் இப்போது மற்றவர்களின் பிடியின்கீழ் வந்து விட்டது.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

எப்போது அவர்கள் அவர்களது உள்ளத்திலுள்ள தக்வாவை மாற்றிக் கொண்டார்களோ அப்போது இறைவன் அவர்களது உலக விஷயங்களை மாற்றி விட்டான். மேலும் அவர்கள் பாவம் செய்வதில் தைரியமிக்கவர்களாக இருந்ததாலும் அவ்வாறு செய்தான். ஒரு சமுதாயம் தனது அகநிலையை தாமாக மாற்றிக் கொள்ளாத வரை இறைவன் எந்தவொரு சமுதாயத்தின் நிலையையும் மாற்றுவதில்லை. மேலும் அவர்கள் மீது கருணை காட்டப்படுவதில்லை. மாறாக, அல்லாஹ் அப்படிப்பட்ட வீடுகள் மீதும் மக்கள் தீய செயல்களை செய்து குற்றம் புரிகின்ற நகரங்கள் மீதும் சாபத்தை இறக்குகின்றான். அந்த தீய செயல்கள் செய்யப்பட்ட வீடுகள் மீது மலக்குகள் இறங்கி வீடே! இறைவன் உன்னை பாழடைந்து விடும்படி செய்வானாக என்று கூறுகின்றனர்.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

நஸ்ரானிய அரசர்களை ஏசாதீர்கள். அவர்கள் கைகளால் உங்களுக்கு என்ன நேர்ந்ததோ அதைப் பற்றி நினைக்காதீர்கள். தீயவர்களே! உங்களை நீங்களே பழித்துக் கூறுங்கள். என்ன? நீங்கள் நான் கூறுவதை கேட்கின்றீர்களா? இல்லை. இல்லை. மாறாக நீங்கள் உங்கள் முக பாவத்தை மாற்றிக் கொள்கின்றீர்கள். மேலும் தீய சொற்களைக் கூறுகின்றீர்கள். உங்களுக்கு கேட்கின்ற காதுகளும் புரியக்கூடிய உள்ளமும் கிடைக்கவில்லை. சாப்பிடுவதையும் குடிப்பதையும் விட்டு விட்டு அறிவின் பக்கம் வருவதற்குரிய ஓய்வு நேரம் உங்களுக்கு எங்கு இருக்கின்றது. மதுவை விட்டு விலகி எப்போது நீங்கள் இறைவன் பக்கம் கவனம் செலுத்தப் போகின்றீர்கள்? உங்களில் சிந்திக்கின்ற இளைஞர் யார் தான் இருக்கின்றார்? நீங்கள் எதிரிகளையா ஏசுகின்றீர்கள்? உங்களுக்கு எவையெல்லாம் வந்துள்ளதோ அவை எல்லாமே உங்களது தீய செயல்களினால்தான் வந்திருக்கின்றது.

**பிறகு அவர்கள் பொதுமக்களைப் பார்த்து இவ்வாறு கூறுகின்றார்கள்:**

கேளுங்கள்! நீங்கள் நல்லவர்களாக இருந்தால் அரசர்களும் உங்களுக்காக நல்லவர்களாகவே உருவாக்கப்பட்டிருப்பார்கள். ஏனென்றால், இறையச்சம் உள்ளவர்களுக்காக இறைவனின் நடைமுறை இப்படித்தான் இருந்திருக்கின்றது. மேலும் முஸ்லிம் அரசர்களைப் புகழ்வதிலிருந்தும் விலகிக் கொள்ளுங்கள். அவர்களுக்காக நீங்கள் நல்லதை விரும்புபவர்களாக இருந்தால் அவர்களுக்காக இஸ்திக்ஃபார் செய்யுங்கள். இறைவன் அவர்களை உங்களது உரிமைகளை நிறைவேற்றுபவர் களாகவும் உங்களை அவர்களது கருவிகளாகவும் ஆக்கியுள்ளான். எனவே, தூய உள்ளம் கொண்டவர்களாக இருந்தால் இறையச்சத்திலும் நன்மையிலும் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்பவராக ஆகிவிடுங்கள். அவர்களது தீய செயல்கள் தொடர்பாக அவர்களுக்கு தெரிவியுங்கள். நீங்கள் நயவஞ்சகராக இல்லாதிருந்தால் அவர்கள் செய்யும் வீணான செயல்களைப் பற்றி அவர்களுக்கு தெரிவியுங்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்கள் தங்களது குடிமக்களுக்கு உரிய உரிமைகளை செலுத்தவில்லை.

புரிய வைப்பது அவசியமானதுதான். நல்லது தான். அனுமதிக்கப்பட்டதுதான் அரசனுக்கு முன்னாலும் உண்மையை கூறத்தான் வேண்டும்.

**தொடர்ந்து அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்களது உள்ளங்கள் மலைகளிலுள்ள கற்களை விட மிகவும் கடினமானதாகும். அவர்கள் ஒருபோதும் இறைவன் முன்னால் மன்றாடுவதில்லை. அவர்களது இந்த செயல்கள் மூலம் அவர்கள் இறைவனை வெறுப்படையச் செய்து வழிகேட்டின் வழிமுறையை மேற்கொண்டுள்ளனர் என்பதை நிரூபித்து விட்டார். மேலும் கொலை செய்பவரே விஷம் குடித்து விட்டு தனது குடிமக்களையும் அதில் சேர்த்து விட்டார். எனவே, அவர்களுக்காக அழிவின் இரு பங்குகள் உள்ளன.

செவியேற்பவர்களே! அவர்களது இந்த பழக்கங்களின் விளைவுகள் பற்றி அவர்களுக்கு தெரிவிக்கின்ற எவராவது ஒருவர் உங்களில் இருக்கின்றாரா? ஏனென்றால் இவர்கள் தங்களது தூய்மையற்ற விருப்பங்களுக்கு பின்னால் சென்று தங்கள் மார்க்கத்தை தொலைத்து விட்டனர். அவர்களது பார்வையும் கோணலாகி விட்டது. மாறாக, எனது பார்வையில் அவர்கள் முற்றிலும் குருடர்களாகவே இருக்கின்றனர். நீங்கள் அவர்களுக்கு கீழ்படிந்து நடப்பதை விட்டு விட்டு அவர்களோடு போர் செய்யுங்கள் என்று நான் உங்களவிடம் கூறவில்லை.

உண்மையான விஷயத்தைக் கூறுங்கள். போர் செய்ய அனுமதியில்லை. துஆவின் பக்கமும் முதலில் கவனமூட்டியுள்ளார்கள். இஸ்திக்ஃபார் செய்வதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள்.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

நீங்கள் அவர்களுக்கு கீழ்படிந்து நடப்பதை விட்டு விட்டு அவர்களோடு போர் செய்யுங்கள் என்று நான் கூறவில்லை. மாறாக, இறைவனிடம் அவர்கள் சிறந்து விளங்க துஆ செய்யுங்கள். அவர்கள் தீமைகளிலிருந்து விலக துஆ செய்யுங்கள். எந்த விஷயங்களில் தஜ்ஜாலின் கைகள் சீர்குலைவை ஏற்படுத்தி விட்டதோ அதை அவர்கள் சீர்திருத்தி விடுவார்கள் என்று அவர்கள் மீது நம்பிக்கை வைக்க வேண்டாம். இவ்வளவு அழிவும் கவலைகளும் ஏற்பட்ட பிறகும் சமுதாயத்தின் நிலைமையை அவர்கள் சீர்திருத்தி விடுவார்களா?

ஒவ்வொரு களத்திற்கும் அதற்குரிய குறிப்பிடத்தக்க சிறந்த வீரர்கள் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். மரணித்தவர்கள் மற்றவர்களை உயிர்பிப்பது சாத்தியமானதா? வழிகேட்டில் இருப்பவர் மற்றவர்களுக்கு வழிகாட்ட முடியுமா? பிறகு இவர்களிடம் நீங்கள் என்ன நம்பிக்கை வைத்துள்ளீர்கள்? அவர்கள் சரியாகி விடுவார்கள் என்ற நம்பிகை நமக்கில்லை. மரணம் அவர்களிடம் வந்து அவர்களை தட்டி எழுப்பாத வரை இதே நிலைதான் நீடிக்கும். போதனை செய்வதற்கும் அறிவுரை கூறுவதற்கும் நமக்கு கட்டளை இடப்பட்டுள்ளது.

**கூறுகின்றார்கள்:** இவர்களிடம் தொலைநோக்கு பார்வையின் ஆற்றலும் அரசியல் நடத்துவதற்கான வழிமுறைகள் பற்றிய அறிவும் இல்லை. தங்களது அண்டை வீட்டுக்காரர்களான கிறித்தவர்களின் சூழ்ச்சிகளை கற்றுக்கொள்ள இவர்கள் விரும்பினார்கள். ஆனால் நுட்பமான ஏமாற்று வேலைகளிலம் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் திட்டங்களிலும் அவர்களுக்கு ஈடாக இவர்கள் இருக்க முடியாது. இவர்களது நிலை கழுகைப் போல் பறக்க எண்ணுகின்ற சேவலின் நிலையாகும்.

**கூறுகின்றார்கள்:** கிறித்தவர்களுக்கு எதிரில் அல்லாஹ்வின் தக்வாவை மேற்கொள்வது தொடர்பாக இவர்களுக்கு வழங்கப்பட்ட போதனைகளிலிருந்தும் அவர்கள் முகம் திருப்பிச் சென்று விட்டனர். மேலும் அவர்களது எதிரிகள் போன்று அவர்கள் கையாளும் தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் கூட முழுமையாக இவர்கள் கற்றுக் கொள்ளவில்லை. முஸ்லிம் அரசர்கள் தொடர்பாக அவர்கள் இறையச்சமுள்ளவர்களாக ஆகாத வரையில் அல்லாஹ் அவர்களுக்கு உதவி செய்ய மாட்டான் என்று இறைவன் வாக்குறுதி வழங்கியுள்ளான். நஸ்ரானியர்கள் அவர்களது சூழ்ச்சிகளில் வெற்றி பெற வேண்டும் என்றே அவ்விறைவன் நாடியிருந்தான். மேலும் மூஃமின்கள் அவ்விறைவனை வெறுப்படையும்படி செய்து விட்டனர்.

**கூறுகின்றார்கள்:** நீங்கள் இஸ்லாமிய எல்லைப் புறங்களை காஃபிர்களிடமிருந்து காப்பாற்றி விடலாம் என்று எண்ணுகின்றீர்களா? அவர்கள் இஸ்லாத்தின் அடைக்கலத்தின் கீழ் இருக்கின்றார்கள் என்று நீங்கள நினைக்கின்றீர்களா? சுப்ஹானல்லாஹ். இது மிகப்பெரும் தவறாகும். மாறாக அவர்கள் பித்அத்துகள் மூலம் மக்களில் சிறந்தவராக இருந்தவரின் மார்க்கத்தை வேரறுத்து விட்டனர். நீங்கள் அவர்களைப் பற்றி நல்லதை நினைப்பதற்கும் தீய செயல்களிலிருந்து அவர்கள் விடுபட்டு விட்டனர் என்று நிரூபிப்பதற்குரிய உரிமை உங்களுக்கு உண்டா? எந்த அடையாளங்கள் மூலம் இப்படிப்பட்ட வாதத்தை உங்களால் செய்ய முடியும்?

கஃபாவின் ஊழியர்களாகவும், பாதுகாவலர்களாகவும் அவர்கள் இருக்கின்றார்கள் என்று கருதுகின்றீர்களா? அவ்வாறில்லை. மாறாக கஃபா அவர்களைப் பாதுகாக்கின்றது. ஏனென்றால், அவர்கள் இஸ்லாத்தின் மீதும் இறைவனின் தூதர் மீதும் அன்பு வைத்திருப்பதாக வாதம் புரிகின்றனர். அவர்கள் உண்மையான தவ்பா செய்யாவிட்டால் தண்டனை அவர்களது தலை மேல் நிற்கின்றது. அவர்களது தீய நாட்கள் தொடர்பாக அவர்களுக்கு அச்சமூட்டக்கூடிய எவராவது உங்களில் இருக்கின்றாரா? காலத்தின் கைகளால் இஸ்லாத்திற்கு இழப்பு ஏற்படுவதை நீங்கள் பார்க்கவில்லையா? தொடர்ந்து பொழிகின்ற மழையைப் போல் குழப்பங்கள் அதன் மீது பொழிகின்றன. எதிரிகளின் படைகள் வேடனைப் போன்று அதை வலையில் சிக்க வைக்க முயல்கின்றன. உள்ளத்திற்கு மகிழ்ச்சியூட்டி துக்கங்களை அகற்றுகின்ற எந்தவொரு விஷயமும் இல்லை. காட்டில் தாகத்துடன் செல்பவனைப் போலவும் மரண தருவாயில் இறுதி மூச்சை சுவாசித்துக் கொண்டிருக்கும் நோயாளியைப் போன்றும் முஸ்லிம்கள் உள்ளனர்.

**கூறுகின்றார்கள்:** சில மக்கள் முஸ்லிம்களை பரிகாசம் செய்தவாறு செல்கின்றனர். சிலர் அழுதவாறு அவர்களை பார்க்கின்றார்கள். உள்ளங்கள் கடினமாகி விட்டதையும் பாவங்கள் அதிகமாகி விட்டதையும் நீங்கள் பார்க்கின்றீர்கள். நெஞ்சங்கள் சுருங்கி விட்டன. கவனமின்மை, சோம்பேறித்தனம், பாவங்களில் முன்னேறுதல், அறியாமை, வழிகேடு, குழப்பம் ஆகியவை மிகைத்து விட்டன. தக்வாவின் பெயரும் அடையாளமும் இல்லாமல் ஆகிவிட்டது. ஈமானுக்கு ஆற்றலை வழங்கக்கூடிய அந்த ஒளி உள்ளங்களில் இல்லை. கண்களும், நாவுகளும், காதுகளும் அசுத்தங்களாகி விட்டன. கொள்கைகள் சீர்குலைந்து விட்டன. புரியும் தன்மை பறிக்கப்பட்டு அறியாமை வெளிப்பட்டு விட்டது. இறைவணக்கத்தில் காட்டுதலும் தூய்மையில் சுயநலமும் நுழைந்து விட்டது. நற்பாக்கியத்தின் அடையாளங்கள் அழிந்து விட்டன. அன்பும் ஒற்றுமையும் இல்லாமல் ஆகி விட்டது. காழ்ப்புணர்ச்சியும் பிரிவினையும் உருவாகி விட்டன. முஸ்லிம்களிடம் இல்லாத எந்தப் பாவமும் அறியாமையும் இல்லை. அவர்களின் ஆண்களிடமும் பெண்களிடமும் குழந்தைகளிடமும் இல்லாத எந்த அநீதியும் வழிகேடும் இல்லை. குறிப்பாக இவர்களின் தலைவர்கள் உண்மையான வழியைக் கைவிட்டு விட்டனர்.

கடந்த சில நாட்களுக்கு முன் நான் ஒரு ரிப்போர்ட்டில் பார்த்தேன். தனக்கு தெரிந்த ஒரு முஸ்லிம் நண்பரை சந்திப்பதற்காக இன்னொரு நாட்டிலிருந்து ஒரு கிறித்தவர் இங்கிலாந்திற்கு வந்திருந்தார். அந்த கிறித்தவருக்கு அந்த முஸ்லிம் மது அருந்துவது தெரியும். அவர் அவரிடம் எனக்கு சில அஹ்மதி நண்பர்களும் இருக்கின்றார்கள் என்று கூறினார். ஆனால் அந்த முஸ்லிமோ அவருக்கு எதிரில் அமர்ந்து மது அருந்திக் கொண்டு இருந்தார். மது அருந்திக் கொண்டிருந்த அந்த முஸ்லிம் அஹ்மதிகள் தான் முஸ்லிம்கள் இல்லையே. நீங்கள் ஏன் அவர்களைப் பற்றி பேசுகின்றீர்கள்? என்று கிறித்தவரிடம் கேட்டார். கிறித்தவர் கூறுகின்றார். நான் அவரிடம் திருக்குர்ஆனில் மது தடை செய்யப்பட்டுள்ளது என்று கூறினேன். அஹ்மதிகள் மது அருந்துவதில்லை. அவ்வாறிருந்தும் அவர்கள் முஸ்லிம்கள் இல்லை. அஹ்மதிகள் தொழுகின்றார்கள். அவ்வாறிருந்தும் அவர்கள் முஸ்லிம்கள் இல்லை. எவர்களை நான் பார்த்திருக்கின்றேனோ அந்த அஹ்மதிகள் திருக்குர்ஆனின் போதனைகளுக்கேற்ப செயல்பட முயற்சி செய்கின்றார்கள். அவ்வாறிருந்தும் அவர்கள் முஸ்லிம்கள் அல்ல என்று நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால் நீங்கள் எனக்கு முன்னால் அமர்ந்து மது அருந்துகின்றீர்கள். திருக்குர்ஆனின் போதனைகளுக்கு எதிராக செயல்படுகின்றீர்கள். அவ்வாறிருந்தும் நீங்கள் முஸ்லிம்களாக எப்படி இருக்கின்றீர்கள்? என்று நான் அவரிடம் கேட்டேன். முதலில் நான் கூறுவதையெல்லாம் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார். எதையும் பேசாமல் இருந்தார். மது அருந்தும் கிளாஸ் கையில் இருந்தது. நான் அவரிடம் கூறினேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் குடிக்கலாம் என்றதும் சிறிதும் காத்திராமல் உடனடியாக அவர் மது அருந்த ஆரம்பித்து விட்டார். இதுதான் முஸ்லிம்களின் நிலையாகும். ஆனால் இவர்கள், அஹ்மதிகள் முஸ்லிம்கள் அல்ல என்று கூறுகின்றார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

அடையாளங்கள் வெளிப்பட்டன. ஆனால் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் இறைவனின் கோபம் இறங்கியது. அவர்கள் தண்டனையைப் பார்த்த போது உம்மை நாங்கள் அசுத்தமாக

கருதுகின்றோம் என்று கூறினார்கள். இந்த பிளேக் நோயும் உனது பொய்யின் காரணமாகவே பரவியுள்ளது என்றும் கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நவூதுபில்லாஹ் பொய்யான வாதம் செய்ததனால்தான் இந்த தண்டனைகள் வருகின்றன என்று அவர்கள் கூறினார்கள். இன்றும் இதே நிலைதான் உள்ளது.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:** உனது தீய சகுனம் உன்னோடு இருக்கின்றது என்றும் கூறப்பட்டது. நவூதுபில்லாஹ். விண்ணிலிருந்தும் பூமியிலிருந்தும் தண்டனையுடன் வராத எந்தத் தூதரையும் இறைவன் அனுப்பவில்லை. அவர்கள் தீய செயல்களிலிருந்து விலக வேண்டும் என்பதற்காகவே அவை வருகின்றன. இறை தண்டனையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஆதரவாகவே இருக்கின்றது.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:** உங்களது அரசர்களில் எந்த அரசர் பெரும் வெள்ளம் வந்த போது கப்பலை உருவாக்கினார் என்பதைக் கூறுங்கள். மாறாக, மூழ்குபவர்களுடன் சேர்ந்து அவர்களும் மூழ்கி விட்டார்கள். அவர்களது முகத்தை தூசியும் மண்ணும் மூடி விட்டன. காலம் அவர்களது மகிமை அவர்களை விட்டு பிரிந்து விட்டது. அவர்களும் பல திட்டங்களை தீட்டினர். ஆனால் அதிலிருந்து எந்தப் பலனையும் பெறவில்லை. அவர்கள் தங்களது கமிட்டிகள் மூலமும் பாராளுமன்றங்கள் மூலமும் எதிரிகளின் எல்லைகளில் படைகளைக் குவிப்பதன் மூலமும் சீர்திருத்தத்தை ஏற்படுத்த முடியவில்லை. சில நேரங்கள் அவர்கள் ஆயுதங்களுக்கு மெருகூட்டினார்கள். பெரும் பெரும் படைகளை அனுப்பி வைத்தார்கள். ஆனால் தோல்வி, மிகப்பெரும் இழிவு ஆகியவற்றைத் தவிர வேறு எவ்வித விளைவும் ஏற்படவில்லை.

சிகிச்சை அளிப்பவர்களே! உங்களது பார்வையில் சிகிச்சைக்கான என்ன வழிமுறை இருக்கிறது? என்பதை இப்போது கூறுங்கள். உங்களது கருத்திற்கேற்ப இந்த செல்வம் படைத்தவர்களால் இந்த துன்பத்தை அகற்ற முடியுமா? இந்த முட்களிலிருந்தும் மார்க்கத் தோட்டத்தை இந்த அரசர்களால் தூய்மைப்படுத்த முடியும் என்று நீங்கள் நம்புகின்றீர்களா? இந்த நோய்கள் இஸ்லாமிய ஆட்சிகள் மூலமாகவும் அவர்களுக்கு தெரிந்த முயற்சிகள் மூலமாகவும் அகன்றுவிடும் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா? இல்லை. ஒருபோதுமில்லை. நீங்கள் கள்ளிமரங்களிலிருந்து புத்தம்புது பேரீத்தம் பழங்களை எதிர்பார்ப்பதைப் போன்று இவ்விஷயம் அதைவிட கடினமானதாகத்தான் இருக்கின்றது.

நீங்கள் அவர்களிடம் எதை எதிர்பார்க்கின்றீர்கள்? அவர்கள் கற்களுக்கு கீழ் அமுங்கிப் போய் விட்டார்கள். அவர்கள் ஆயிரக்கணக்கணக்கான துன்பங்களுக்கு கீழே இருக்கும்போது எப்படி தங்களது தலைகளை அவர்களால் உயர்த்த முடியும்? இந்த ஆபத்துகளை அகற்றுவது அரசர்கள் மற்றும் செல்வம் படைத்தவர்களின் ஆற்றலுக்கு உட்பட்ட விஷயம் அல்ல என்பதை உண்மையாகவே உங்களுக்கு கூறிக் கொள்கின்றேன். எப்போதாவது குருடன் இன்னொரு குருடனுக்கு வழிகாட்டி இருக்கின்றானா?

அறிவுள்ளவர்களே! இந்த முஸ்லிம் அரசர்கள் அல்லது தூய உள்ளம் கொண்டவர்கள் உங்களிடம் அனுதாபத்துடன் நடந்து கொண்டாலும் அவர்களது ஆன்மாக்கள் தூய்மையான முழுமையான இறையடியார்களின் ஆன்மாக்களைப் போன்று இருக்க முடியாது. புனிதவான்களுக்கு வழங்கப்படும் ஒளியும், ஈர்க்கும் தன்மையும் அவர்களுக்கு வழங்கப்படமாட்டாது. ஏனென்றால், தன்னையே இறைவனுக்காக மாய்த்துக் கொள்ளும் நெருப்பால் எரிகின்ற அந்த உள்ளத்தின் மீதுதான் விண்ணிலிருந்து ஒளி இறங்க முடியும். பிறகு அதற்கு உண்மையான அன்பு வழங்கப்படுகிறது. இறைதிருப்தியின் நீரூற்றால் அது குளிப்பாட்டப்படுகிறது. அகப்பார்வை, உண்மை, தூய்மை ஆகியவற்றின் சுர்மா அதன் கண்களில் போடப்படுகிறது. பிறகு அதற்கு இறைவனால் தேர்ந்தெடுக்கப்படுதல் என்ற ஆடை அணிவிக்கப்படுகிறது. பிறகு அதற்கு நிலைத்து நிற்கின்ற தகுதி வழங்கப்படுகிறது. தானே இருளில் அமர்ந்திருக்கும் நிலையில் ஒருவரால் எப்படி இருளை அகற்ற முடியும்? எவர் இன்பங்களின் மஞ்சங்களில் உறங்குகின்றாரோ அவரால் யாரை எழுப்ப முடியும்? உண்மையான விஷயம் என்னவென்றால், இந்த காலத்திலுள்ள அரசர்களுக்கு ஆன்மீக விஷயங்களுடன் எந்தத் தொடர்பும் இல்லை. இறைவன் அவர்களது முழு கவனத்தையும் பௌதீக அரசியலின் பக்கம் திருப்பி விட்டான். இஸ்லாத்தின் தோலுக்கு அதாவது வெளித்தோற்றத்திற்கு உதவி செய்வதற்காக ஏதோ

ஒரு திட்டத்தின்கீழ் அவர்களை இறைவன் இதற்காக நியமித்துள்ளான். அரசியல் விஷயங்களே அவர்களின் கண் முன்னால் இருக்கும். இஸ்லாமிய எல்லைப் புறங்களை கண்காணிப்பதற்கான சிறந்த ஏற்பாட்டைச் செய்வதைத் தவிர வேறு எந்த பெரிய கடமையும் அவர்களுக்கு இல்லை. வெளிப்படையாக தெரியும் நாட்டு நிலவரங்களை அறிந்து, எதிரிகளின் பிடியிலிருந்து அதை காப்பாற்றுவது மட்டுமே அவர்களது பணியாக இருக்கின்றது. மக்களது உள்ளங்களை அழுக்குகளிலிருந்தும் தூய்மைப்படுத்துவது, ஷய்த்தானிடமிருந்து மக்களைக் காப்பாற்றுவது, ஆபத்துகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்துக் கண்காணிப்பது, துஆவுடனும் தைரியத்துடனும் இந்த எல்லாப் பணிகளையும் செய்வது என்பது அரசர்களின் சக்திக்கும் தைரியத்திற்கும் அப்பாற்பட்ட விஷயமாகும். இதை அவர்களால் செய்ய முடியாது.

அறிவுள்ளவர்களுக்கு இந்த விஷயம் மறைவானதாக இல்லை. நாட்டின் கடிவாளம் அரசர்களிடம் ஒப்படைக்கப்படுவது, அவர்கள் இஸ்லாத்தின் வெளித் தோற்றத்தை ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான். ஆன்மாக்களைத் தூய்மைப்படுத்தி அகக்கண்களை ஒளிமயமானதாக ஆக்குவதற்காக இது அவர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை.

**பிறகு இக்காலத்திலுள்ள ஆலிம்களைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இவர்களில் பெரும்பாலார் இஸ்லாத்தில் நோயை ஏற்படுத்துகின்றார்கள். இவர்கள் நோய்க்கான சிகிச்சையை வழங்க வரவில்லை. பல்வேறு சாக்குப்போக்குகளைக் கூறித் தந்திரமாக இவர்கள் மக்களின் செல்வங்களை அபகரித்துக் கொள்கின்றனர். அவர்கள் கூறுவதை செய்வதில்லை. போதனை செய்வார்கள்; அந்த போதனைக்கேற்ப அவர்கள் செயல்படுவதில்லை. அவர்களது நாவு வெட்டக்கூடியதாகவும் உள்ளம் கடினமானதாகவும் இருள்களால் நிரம்பியும் இருக்கின்றது. அவர்களது கருத்துக்கள் பலவீனமானதாகவும் மூளை கூர்மையற்றதாகவும் இருக்கின்றது. தைரியமற்ற நிலை இருப்பதுடன் செயல்களும் தீயதாக இருக்கின்றது. சிறிய அறிவில், அவர்கள் ஆணவம் கொள்கின்றார்கள். அவர்கள் கருத்து வேறுபாடு கொண்டவர்களிடம் மிகவும் கடுமையான சொற்களால் அவர்களை காயப்படுத்துவார்கள். பல்வேறு சூழ்ச்சிகள் மூலம் அவர்கள் மீது குஃப்ர் ஃபத்வாக்களை வழங்குவார்கள். அவர்களைத் துன்புறுத்தி அவர்களது செல்வத்தைக் கொள்ளையடிப்பார்கள். கஞ்சத்தனம் இவர்களது இயல்பிலுள்ள விஷயமாகவும், பொறாமை இவர்களது குணமாகவும், ஷரீஅத்தை மாற்றுவது இவர்களது மார்க்கமாகவும் இருக்கின்றது. கோபம் ஏற்படும் சமயத்தில் இவர்கள் ஓநாய்களாக இருப்பார்கள். இவர்களது வெறுப்பும் மகிழ்ச்சியும் தீமையைத் தூண்டும் இவர்களது ஆன்மாவிற்காகவே இருக்கும். இவர்களது திக்ரும் தஸ்பீஹும் காட்டுதலுக்காக மட்டுமே இருக்கும். மக்களது கழுத்துகளுக்கு தாங்களே எஜமானர்கள் என்று இவர்கள் தங்களைக் கருதிக் கொள்கிறார்கள்.

எத்தகைய உண்மை நிலையை அன்று அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இன்றைய நாட்களில் பாகிஸ்தானில் இவர்கள் மிகவும் அதிகமாக தங்களை மக்களது கழுத்துக்களுக்கு எஜமானர்களாக கருத ஆரம்பித்துள்ளார்கள்.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:** இவர்கள யாரை விரும்புகின்றார்களோ அவரை மலக்காகவும், யாரை விரும்புகின்றார்களோ அவரை ஷய்த்தானின் சகோதரராகவும் ஆக்கி விடுவார்கள். இவர்களிடம் மென்மை, சகிப்புத்தன்மை ஆகியவற்றின் பெயரும் அடையாளமும் கூட இல்லை. நாவால் பிறருக்குத் துன்பமிழைப்பதில் இவர்கள் விலங்குகளையும் மிஞ்சிவிட்டார்கள். அவர்கள் உங்களிடம் ஆடுகளின் ஆடையணிந்து வருவார்கள். ஆனால் அவர்கள் பல்வேறு பழித்துறைகள் மூலம் உங்களை தாக்குகின்ற இரத்த வெறிப்பிடித்த ஓநாய்கள் ஆவார்கள். இவர்களது கைகள் பொய்யான ஃபத்வாக்களை எழுதுகின்றது. ஒன்று அல்லது இரண்டு திர்ஹம்கள் இவர்களது ஈமானை அழிப்பதற்குப் போதுமானதாக இருக்கும். உண்மையை ஏற்றுக் கொள்வதிலிருந்தும் அவர்கள் மக்களைத் தடுக்கின்றார்கள். ஷய்த்தானைப் போன்று அவர்களது மனதில் சந்தேகங்களை ஏற்படுத்துகின்றனர். இவர்களது ஆணவம் மிகவும் அதிகமாகி விட்டது. சிந்திக்கும் திறன் குறைந்து விட்டது. எந்தப் பயனுள்ள விஷயத்தையும் பேசும் ஆற்றல் இவர்களுக்கு இல்லை. மாறாக, சந்தேகங்களை இவர்கள் அதிகமாக்கி விடுவார்கள். இவர்கள் அமைதியாக இருக்கும்போது,

அவர்களது அந்த அமைதி கடமையானவற்றை விட்டுவிடுவதற்காகவே இருக்கும். பேசும் போது அதில் எவ்வித தாக்கமும் இருக்காது. ஷரீஅத்துடைய முக்கியமான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில் அவர்களுக்கு எந்த அக்கறையும் இருக்காது. இறைவனை அடைவதற்கான நுட்பமான வழிமுறைகள் பற்றி அவர்களுக்குத் தெரியாது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்ற கருத்து மிகத் தெளிவாக இருக்கின்றது. ஆனால், இஸ்லாம் வெற்றி பெறுவது தொடர்பாக அவர்களுக்கு எந்த அக்கறையும் இல்லை.

**கூறுகின்றார்கள்:** இறைவனிடமிருந்து அவர்களது பங்கில் கூச்சலும் குழப்பமும் மட்டுமே இருக்கின்றது. திருக்குர்ஆனை நாவால் மட்டும் அவர்கள் ஓதி விடுகின்றார்கள். இவர்களது உள்ளங்களை எந்த சமயத்திலும் திருக்குர்ஆன் எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

**கூறுகின்றார்கள்:** இவர்களிடம் சோம்பேறித்தனமும் கவனமின்மையும் மிகவும் அதிகமாகி விட்டது. அறிவும், தொலைநோக்குப் பார்வையும் குறைந்து விட்டது. கஷ்டமான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான ஆற்றல் இவர்களிடம் இல்லை. நஃப்ஸின் உணர்வுகளின் காரணமாக அவர்கள் சுயநினைவை இழந்தவர்களாகவும், தனது நஃப்ஸின் கைதிகளாக அவர்கள் இருப்பதையும் நீர் காண்பீர். அவர்கள் ரஹ்மானான இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளை மறந்து விட்டார்கள். இப்படிப்பட்ட நிலையில் அவர்கள் மார்க்கத்திற்கு உதவுவார்கள் என்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்?

காழ்ப்புணர்ச்சி அவர்களை மிருகக் குணமுடையவர்களாக ஆக்கி விட்டது. அது உண்மையைக் கேட்பதிலிருந்தும் அவர்களை தடுத்து விட்டது. பேராசையும் மனயிச்சையைப் பின்பறறிச் செல்வதும்தான் இவர்களின் மார்க்கமாக இருக்கின்றது. உண்பது, குடிப்பது, பொருள்களைத் திரட்டுவதுதான் இவர்களது பணியாக இருக்கின்றது. துயரத்தில் மூழ்கி இருப்பவர்களைப் பார்த்த பிறகும் இவர்கள் குறைவாக சாப்பிடுவதில்லை. அவர்களுக்காக அழுவதுமில்லை. அவர்கள் அழுதாலும் கூட அது முதலைக் கண்ணீராகத்தான் இருக்கும். அவர்களது அரசர்களைப் பார்க்கும் போது அவர்களது உடல் நடுங்குகிறது. ஆனால், வல்லமையுள்ள இறைவனுக்கு அவர்கள் சிறிதும் அஞ்சுவதில்லை. வழிகேடு, குழப்பம் பரவுவதாலோ அல்லது ஆபத்துகள் இறங்குவதைப் பார்ப்பதாலோ அவர்களுக்கு எவ்வித அச்சமும் ஏற்படுவதில்லை. இவர்களில் ஒரு பிரிவினர் ஜிஹாது என்ற பெயரில் அறியாமையில் இருக்கும் மக்களை மற்றவர்களது கழுத்தை வெட்டுவதற்காகத் தூண்டி விடுகின்றார்கள். தங்களுக்கு அறிமுகம் இல்லாதவர்கள், வழிப்போக்கர்கள் ஆகியோரை அம்மக்கள் கொலை செய்கின்றனர். அவர்கள் தக்வாவை மேற்கொள்வதில்லை.

இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூலிலிருந்து சில பக்கங்களை நான் படித்தேன்.

100 ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் கூறியுள்ள விஷயங்கள், முஸ்லிம்களின் நிலை பற்றி அவர்கள் கூறிய விஷயங்கள் இன்றும் முற்றிலும் உண்மையாக இருப்பதை நம்மால் பார்க்க முடிகின்றது. அவர்களது பார்வையும் அவர்களது சொற்களும் இன்றைய முஸ்லிம்களின் செயல்களுக்கு சாட்சியாக இருக்கின்றன. அவர்களது சொற்கள் உண்மையானவை என்பதற்கு அவை சான்றாகத் திகழ்கின்றன. இவர்களைப் பற்றி அல்லாஹ் எவ்வாறு அவர்களிடம் கூறினானோ அதை அவர்கள் கூறிவிட்டார்கள்.

இந்த நிலைமைகளை சரி செய்வதற்கான தீர்வையும் இதே நூலில் அவர்கள் கூறியுள்ளார்கள். இஸ்லாத்திலுள்ள பல பிரிவுகள் பற்றி அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த எல்லாப் பிரிவுகளையும் விட்டுவிட்டு அல்லாஹ் எங்காவது தன் தரப்பிலிருந்து தனது சிகிச்சையை இறக்கியுள்ளானா? என்று தேடிப் பாருங்கள். நினைவில் கொள்ளுங்கள். இந்த குழப்பத்திற்கான சிகிச்சை வானத்தில் இருக்கின்றது. அது மனிதர்களது கைகளில் இல்லை. திருக்குர்ஆனில் பழங்காலத்து மக்களின் வரலாற்றைப் படித்துப் பாருங்கள். இவர்கள் தொடர்பாக இறைவனின் நடைமுறை எவ்வாறிருந்தது? இவர்களுக்குப் பிறகு வரக்கூடியவர்களுக்காக இறைவனின் நடைமுறையில் எப்படி மாற்றம் ஏற்பட முடியும்?

**கூறுகின்றார்கள்:** இந்தக் காலம் ஒரு இமாம் தோன்ற வேண்டிய காலம் இல்லையா? நீங்கள் வழிகேட்டையும் அறியாமையையும் உங்கள் கண்களால் பார்க்கின்றீர்கள். இஸ்லாத்தின் மீது தாக்குதல்கள் நடக்கின்றன. துன்பங்கள் நம்மை விட்டும் அகலவில்லை. இவ்வாறு வழிகேட்டின் புயல் வீசும் போது உங்களுக்கு மத்தியில் இருக்கின்ற ஒரு மார்க்க ஊழியர் உங்களுக்கு தென்படவில்லையா? மக்கள் இறைவனின் போதனையையும் திருக்குர்ஆனின் கட்டளையையும் மறந்து விட்டனர். எவை ஹதீஸ்களில் இடம்பெற்றுள்ளதோ அதையும் அவர்கள் மறுத்து விட்டார்கள். பலர் வழிகேட்டில் கொண்டு செல்லும் கொள்கைகளைப் பின்பற்றி, கிறித்தவர்களுக்கு ஒத்து ஊதுபவர்களாக ஆகிவிட்டார்கள். இவர்கள் மார்க்கத்திற்கு உதவுவார்கள் என்பதை நாம் எதிர்பார்க்க முடியுமா?

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:** ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மட்டும்தான் ஷய்த்தானின் தூண்டுதலிலிருந்து பாதுகாப்பாக இருந்தார் என்று இவர்கள் கூறுகின்றார்கள். இவர்களுக்கு இறைவனின், **நிச்சயமாக எனது அடியார்கள் மீது ஷய்த்தானின் ஆதிக்கம் இருக்க முடியாது** என்ற சொற்களை அவர்கள் மறந்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாவமற்றவர்களாகவும் ஷய்த்தானின் தூண்டுதலிலிருந்து பாதுகாப்புப் பெற்ற தூயவர்களாகவும் இருக்க வில்லையா? இன்று ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் இருப்பது என்ற கொள்கையை விட பெரிய பாவம் எதுவுமில்லை. இந்தக் கொள்கை மூலம் நீங்கள் கிறித்தவர்களுக்கு உதவி செய்கின்றீர்கள்.

**கூறுகின்றார்கள்:** நீங்களே காலத்தின் நிலைகளைப் பற்றி சிந்தனை செய்து பாருங்கள். இந்த உம்மத் பல பிரிவுகளாகச் சிதறுண்டு கிடக்கின்றது. ரஹ்மானாகிய இறைவனின் உதவி இல்லாமல் இவை ஒன்றுசேர்வது சாத்தியமில்லாத ஒன்றாகி விட்டது. ஒவ்வொரு பிரிவும் மற்ற பிரிவினரை காஃபிர் என்று கூறுகிறது. இப்போது வாக்குவாதத்தில் இருந்து விஷயம் போர் வரை எட்டி விட்டது. கருத்து வேறுபாடுகளின் மலையைத் தகர்த்து ஒருவருக்கொருவர் சமாதானமாக நடந்து கொண்டு, ஒரே அணியாகத் திரண்டு, இஸ்லாத்தை எதிர்ப்பவர்களுக்கு முன்னால் மைதானத்தில் வர முடியும் என்று நினைக்கின்றீர்களா? ஒருபோதும் முடியாது.

பாகிஸ்தானில் கத்மே நுபுவ்வத் அமைப்பினரின் ஒரு மாநாடு நடக்க இருந்தது. ஷியா, சன்னி, தேவ்பந்தி, பரேல்வி அனைவரும் அங்கு ஒன்றுதிரண்டிருந்தார்கள். மாநாடு நடப்பதற்கு முன் சண்டை வந்து அவர்கள் பிரிந்து விட்டனர். பிறகு மூன்று வெவ்வேறு இடங்களில் மாநாட்டிற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு அமைப்பைச் சார்ந்தவர்கள் எந்த இடத்தில் மாநாட்டை நடத்த வேண்டியது இருந்ததோ அங்கிருந்த போலீஸார் அவர்களை அங்கிருந்து அகற்றி வேறோரிடத்திற்கு கொண்டு சென்றார்கள். அவர்களது பார்வையில் கத்மே நுபுவ்வத் எப்படிப்பட்ட Issue ஆக இருக்கின்றதென்றால் இவ்விஷயத்தில் அஹ்மதிகளை எதிர்ப்பதில் நாங்கள் அனைவரும் ஒரே உயிராகச் செயல்படுவோம் என்று இவர்கள் கூறி வந்தார்கள். ஆனால், ஒன்றுசேர்ந்து மாநாட்டை இவர்களால் நடத்த முடியவில்லை. ஒரே நகரத்தில் மூன்று வெவ்வேறு இடங்களில் இந்த மாநாடுகள நடந்தன. இதுதான் இவர்களது நிலையாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இது உண்மையில் இறைவனின் பணியாக இருக்கும் போது உங்களுக்கு இந்தப் பணியை செய்வதற்கான ஆற்றல் எங்கிருந்து கிடைக்கும்? பல்வேறு தரப்பிலிருந்து வரும் இம்மக்களை வானத்திலிருந்து ஊதப்படும் எக்காளம் மூலமாகத்தான் அல்லாஹ் உயிர்ப்பிப்பான். வாக்களிக்கப்பட்ட மஸீஹின் மூலம் எவர்களது உள்ளங்களில் ஊதப்படுமோ அவர்களது உள்ளங்களே உண்மையில் எக்காளமாகும். அப்போது மக்கள் ஒரு கலிமாவின் கீழ் ஒன்றுதிரண்டு விடுவர். இதுவே அல்லாஹ்வின் நடைமுறையாகும். எந்த உம்மத்தைச் சீர்திருத்த அவன் விரும்புகின்றானோ அதே உம்மத்திலிருந்து இப்பணியைச் செய்ய அவன் ஒருவரை பிறக்கும்படி செய்கின்றான். ஆனால், இந்தத் தீர்வு ஆலிம்களுக்கும் முழு சமுதாயத்திற்கும் ஏற்புடையதாக இல்லை. ஆனால், அல்லாஹ் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் தொடரை ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் தொடருடன் ஒப்புமைப்படுத்திக் கூறியுள்ளான்.

எவ்வாறு யூதர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீது ஈமான் கொண்ட பிறகு வழிதவறிச் சென்று விட்டார்களோ அப்போது அவர்களை சீர்திருத்த ஒரு நீண்ட காலகட்டத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தோன்றினார்கள். இவ்வாறே முஹம்மதிய உம்மத்தில் இதே அளவிலான காலகட்டம் கடந்த பிறகு, வாக்களிக்கப்பட்ட மஸீஹை அல்லாஹ் அனுப்பியுள்ளான். இது இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டிய இடமாகும். அவனது இந்த அருளுக்கு நன்றிகேடு காட்டுவது சரியல்ல. இந்த செய்தியை தாகத்தோடு இருக்கும் ஒருவரைப்போன்று முஸ்லிம்கள் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். அதனை அல்லாஹ்வின் மிகப்பெரும் அருளாக நினைத்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் குர்ஆனை விட்டுவிட்டு மக்களது கூற்றுகளுக்குப் பின்னால் சென்று விட்டனர். வாக்களிக்கப்பட்ட மஸீஹை மறுத்து விட்டனர். யூதர்களும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை மறுத்தார்கள். இவ்வாறு கீழ்ப்படியாமல் இருப்பதிலும் இருவரும் சமமானவர்களாகி விட்டதால், இதிலும் ஒப்புமை இருக்கின்றது.

அல்லாஹ் முஸ்லிம் உம்மத்திற்கு இந்த உண்மையைப் புரிய வைப்பானாக! முஸ்லிம்களை ஒரே கையின் கீழ் ஒன்றுதிரட்டுவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்தான் வரவேண்டியதிருந்தது. அவர்களும் வந்து விட்டார்கள். முஸ்லிம் நாடுகளில் நிலைமைகளைப் பார்க்கின்றோம். விண்ணிலிருந்தும் பூமியிலிருந்தும் பல்வேறு ஆபத்துகள் இறங்குகின்றன. அல்லாஹ் எந்தத் தூதரை அனுப்ப இருந்தானோ அவர் வந்து விட்டார் என்பதை, இவை (இந்த ஆபத்துகள்) முஸ்லிம்களுக்கு உணர்த்தக்கூடியவையாக அமையட்டும். அவர்களை இவர்கள் ஏற்றுக் கொள்ளட்டும். முஸ்லிம்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்கு இஸ்லாத்தின் எதிரிகள் செய்து வரும் இழிவான முயற்சிகளை முறியடிப்பதற்காக அல்லாஹ்வின் இந்த பயில்வானுக்கு துணையாக நின்று, இந்த ஜிஹாதில் அவர்கள் பங்குபெற்று, மற்ற மார்க்கங்களின் மீது இஸ்லாத்தின் வெற்றியை நிரூபித்துக் காட்ட வேண்டும். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக மிக இழிவான ஆட்சேபணைகள் செய்யப்படுகின்றன. திருக்குர்ஆனையும் அவர்கள் இழிவுபடுத்தும் செயல்களைச் செய்துள்ளார்கள். இவர்களுக்கு எதிராக இன்று எவராவது ஜிஹாது செய்பவர்களாக இருக்கின்றார்கள் என்றால் அது அல்லாஹ்வின் இந்த பயில்வானேயாவார். அவரோடு இணைந்து நாம் உலகில் இஸ்லாத்தை உயர்வடையச் செய்ய முடியும். அதன் வெற்றியை நிரூபிக்க முடியும். எல்லா வேத நூல்கள் மீதும் திருக்குர்ஆனுக்கு இருக்கின்ற உயர்வான தனிச் சிறப்பை நிரூபிக்க முடியும். இந்த பயில்வானுடன் இணைந்துதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் கண்ணியத்தை நிலைபெறச் செய்து அவர்களது உயர் தகுதியை உலகில் நிலைநிறுத்த முடியும். அல்லாஹ் நமக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 15.04.2011**

Translated by : **Maulvi M. RAFEEQ AHMAD H.A.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**